46

# சங்ககாலத் தழையுடை

முனைவர். கோ.ராஜேஸ்வரி

உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை

முதுகலை விரிவாக்க மையம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

மனிதச் சமூகம் தொடர்ந்து தன்னுடையத் தேவைகளுக்காகப் போராடிக் கொண்டே இருக்கின்றது. சமூகம் வளரவளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. வாழ்வியல் முறைகளும் அதற்கேற்றாற் போல் மாறிக் கொண்டிருக்கின்றன ஒரு தலைமுறைக்கும் அடுத்தத் தலைமுறைக்கும் இடையில் கூட இந்த மாற்றங்களை உணரமுடியும். ஒருதலைமுறையின் வாழ்வியல் தேவைகள் அடுத்தத் தலைமுறையினருக்குத் தேவையற்றவையாக மாறிவிடுகின்றன. இத்தகைய மாற்றங்களைப் பொருள்சார் பண்பாட்டில் கண்டுணரவது மிக எளிது. இன்று நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்சார் பண்பாட்டுப் பொருட்களும் நீண்ட நெடியப் பயணத்தைக் கடந்து வந்தவை என்பதை அவற்றின் வரலாறுகளின் வழி அறியமுடியும். இத்தகைய ஒரு நீண்ட வரலாறு நாம் அணியும் ஆடைகளுக்கும் உண்டு. நெசவுத் தொழிலும் ஆடை உற்பத்தியும் தொல் பழமையானவை. மனிதச் சமூகத்தின் தொடக்கக் காலத்திலிருந்தே ஆடை உற்பத்தி அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக இருந்து வந்துள்ளது. தமிழின் பழமையான இலக்கியமாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் ஆடை குறித்தப் பல பதிவுகள் உள்ளன. குறிப்பாகத் தழையாடை குறித்த குறிப்புகள் தொன்மையான ஆடையைக் குறிப்பதாகும். எனவே சங்க இலக்கியங்களில் காணப்படும் தழையாடை குறிப்புகளைக் கொண்டு தழையாடையின் வளர்ச்சிக் கட்டங்களை அடையாளப்படுத்த இயலமா என்பதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

தழையுடை முதல் பருத்தியால் நெய்யப்பட்ட ஆடை வரையிலும் சங்க இலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன. தழையுடையே மனிதனால் முதலில் கண்டுபிடிக்கப்பெற்ற நெய்யப்பட்ட ஆடை ஆகும். கடும் குளிர் வெப்பம் ஆகியவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்க தழைகளையும் மரப் பட்டடைகளையும் விலங்குகளின் தோலையும் ஆதிகால மனிதன் பயன்படுத்தினான். வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் அடிப்படையாகக் கொண்ட இனக்குழு வாழ்க்கையில் இயற்கையாகக் கிடைத்தப் பொருட்களைக் கொண்டு ஆடைகளை உருவாக்கினான். தோலாடைகள் கண்டுபிடிக்கப்படாத துவக்ககாலத்தில் பெண்கள் அகலமான மர இலைகள், குழைவான மரப்பட்டைகள் ஆகியவற்றை மறைப்பாக பயன்படுத்தத் துவங்கினர். அவற்றை நார்களில் கோரத்து மார்பிலும் இடையிலும் கட்டிக் கொண்டனர் (பல்லடம் ரவி 2006: 11). தழைகள், மரப்பட்டைகள் குறித்த அறிவை உணவு சேகரித்தல் வாழ்க்கையில் பெற்றான். வேட்டையின் மூலம் கிடைத்த விலங்குகளின் தோலைப் பல்வேறு பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றும் அறிவைப் பெற்றான். மரப்பட்டையும் தோலும் நெய்யப்படாமலே ஆடையாகப் பயன்படுத்தும் வாய்பைத் தந்தன. இதற்கு மாறாக தழையாடை



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

நெய்யப்பட்டு உருவாக்கப்பட்டது. இலை தழைகளையும் மலர்களையும் கோர்த்து உருவாக்கப்படுவதே தழையாடையாகும்.

தழையாடையைச் சங்க இலக்கியங்கள் தழையணி, தழையுடை ஆகிய சொற்களால் குறிப்பிடுகின்றன. இளம் பெண்கள் தங்களது அடிவயிற்றுப் பகுதியில் (அல்குல்) தழையணி அணிந்திருந்ததாக குறு.125, 159, 295 அகம்.7, 70, 201, 275, 320, 331ஆகிய பாடல்களில் குறிப்புகள் பதிவாகியுள்ளன. தலைவனுடன் தலைவி உடன்போக்கு சென்றதை அறிந்த செவிலித்தாய் அவளைத் தேடிச் சுரத்தினிடையே பின்தொடர்ந்து சென்றாள். இடைச் சுரத்தில் பெண் மான் ஒன்றைக் கண்ட செவிலி அதனிடம் தன் ஆற்றாமையைப் புலப்படுத்திக் கூறியதாக அமையும் அகநானூற்றின் ஏழாவதுபாடல் பெதும்பைப் பருவப் பெண்கள் தழையாடை அணிவதைக் குறிப்பிடுகின்றது.

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண் தழையுடையை
அலமரல் ஆயமொடி யங்காணும் படா அல்
மூப்புடை முதுபதிதாக் கணங்குடைய (அக. 7).

அறிவினையுடைய இளையமகளே, நினக்கு முலைகள் அடிவரைந்து கட்புலனாகி நிரம்பின. விழுந்தெழுந்த கூர்மையான பற்கள் ஒளிகொண்டன. கூந்தலும் முடிதலுக்கு ஏதுவாக நன்குவளரந்து அமைந்தன. குளிரந்த தழையாடையை உடுத்தியுள்ளாய். சுழன்று திரியும் நின் தோழியருடன் எவ்விடத்தும் செல்லாதே. பழமை வாய்ந்த இந்தப் பதியின் இடங்கள் தாக்கி வருத்தும் தெய்வங்களை உடையன. அதனால் நீ இனிக் காவலும் பூண்டாய். நம் வீட்டின் வாயிலிடத்தும் செல்லாது இருப்பாயாக. நீபேதைப் பருவத்தினள் அல்லள். பெதும்பைப் பருவத்தினை அடைந்துவிட்டாய். யாதுகருதிப் புறப்படாத பருவத்தே புறத்துப் போனாய்? பொன்னாற் செய்த புலிப் பல்லோடு கோத்த தனி மணித் தாலியினை அணிந்தவளும் தழைத்த அசோகந் தளிரினால் ஆன தழையாடையால் அழகுறத் திகழும் அல்குலை உடையவளும் பலாவினது சிறந்தசுளைகளை உண்ணும் முசுக்கலைகள் உதிரத் தலையில் ஆரக்கினைப் பெற்ற வெள்ளிய பலாக் கொட்டைகள் எவ்விடத்தும் கொள்ளுமாறு இறைந்து கிடக்கும் மலையின் கண் அமைந்துள்ள சிறுகுடியை உடையவளுமாகிய கானவன் மகளாகிய என் மகள் நான் கடிந்து கூறியதைக் கேட்டாள் என்பதே இப்பாடல் தரும் செய்தியாகும்.

தழையாடையைப் பெதும்பைப் பருவத்தினர் அணிந்திருந்தனர். தழையாடை அசோகமரத் தளிர்களால் ஆக்கப்பட்டது. அல்குலை மறைக்கத் தழையாடை அணியப்பட்டது என்னும் மூன்று செய்திகள் இப்பாடலில் இடம்பெற்றுள்ளன. நீபேதைப் பருவத்தினள் அல்லள்: பெதும்பைப் பருவத்தினள் எனச் செவிலித் தாய் குறிப்பிடுவதால் பேதைப் பருவப் பெண்களும் தழையாடை அணிவதுண்டு எனக் கருத இயலும். விழாக் காலங்களில் பெண்கள் தழையாடையைப் பூக்களால் அலங்காரம் செய்த செய்திகளும் உள்ளன.

வதுவை கூடியபின்றை, புதுவது

பொன் வீஞாழலொடு புன்னை விரிக்கும்
கானல் அம் பெருந்துறைக் கவினிமாநீரப்
பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்

விழவு அணிமகளிர் தழைஅணிக் கூட்டும் (அகம்.70)

புதிதாக மலர்ந்த பொன் நிறமுடைய புலிநகக் கொன்றையின் பூக்களும் தரையில் சித்திரம் தீட்டினாற் போல் உதிர்ந்து கோலஞ் செய்யும். அன்ன வளமான கடற்கரைச் சோலையருகே அழகிய பெருந்துறைகளின் அணிமையிலுள்ள வயல்களின் கரிய நீரில் பசுமையான இலைகளையும் தழைத்த திரண்ட தண்டுகளையும் உடைய நெய்தற் பூக்களை விழாவிற்குத் தம்மை அலங்காரம் செய்து கொள்ளுகின்ற பெண்கள் தங்கள் தழையாடைக்கு அழகுசெய்யும் பொருட்டுப் பறித்துச் சேரப்பர. நெய்தற் பூக்கள் தழையாடையில் அழகுசேரப்பதற்கு இணைக்கப்பெற்றன என்ற செய்தியை இப்பாடல் பதிவுசெய்துள்ளது.

உயரந்தெழுந்து வருதலையுடைய திரை ஒலிக்கும் கடற்பரப்பில், மீன்பிடிக்கும் படகினைக் கொண்ட தமயன்மார்கள் வலை விரித்து அஞ்சாத தன்மையுடைய வலிமை பொருந்திய மீன்களைப் பிடித்துக் கொண்டுவருவர். தழையாடை உடுத்திய அழகிய அல்குலையுடைய தங்கைமார் திருவிழாக்கள் நடைபெறும் தெருக்களில் அவற்றை விற்றுவருவர். திருவிழாக் காலங்களில் தழையாடை உடுத்திய நெய்தல் நில இளம் பெண்கள் தெருக்களில் மீண்கள் விற்றனர் என்ற செய்தியை அகநாநூறு 320 ஆவதுபாடல் தருகின்றது. தலைவி ஞாழல் மரத்தின் தழைகளால் செய்யப்பட்ட தழையுடை அணிந்திருந்தாள் என ஐங்குநுறூறு பதிவுசெய்துள்ளது (191: 1-4).மாமரத் தழையால் தழையாடை செய்யப்பட்டதாக கலித்தொகை (30) குறிப்பிடுகின்றது. தலைவிக்குத் தலைவன் தழையுடை அணிவித்த செய்தியை நற்றிணை 96 ஆவதுபாடல் பதிவுசெய்துள்ளது.

தோழி! நறுமணம் கமழுகின்ற பூவைப் பெற்ற ஞாழலின் பெரிய மலரும், புன்னையின் மலரும் உதிரந்து பரவிக்கிடக்கும் வெண்மணற் பரப்பில் ஓரிடம் காட்டி, என்னைப் புதியதாகத் தலைவன் இயற்கைப் புணரச்சியுற்ற சோலை இதுவே என்றனை. பொலிவுடைய அலைகள் வீசும் கடலில் நம்மோடு நீராடி என் முதுகின்கண் தாழ்ந்து இருண்ட விளங்கிய ஐந்து பகுதிகளாக வகுக்கப்பெறும் கூந்தலைப் பிழிந்து உலரவைத்து அவர் உதவியருளிய துறை உதுவே என்றனை. வளர்ந்த தண்டு உயரந்து நீண்ட கால்களையுடைய நெய்தலின் அழகிய ஒன்றோடு ஒன்று மாறுபடத் தொடுத்த நெறித்ததழயை அழகுமிக எனக்கு அணிவித்துவிட்டு அவர் தமியராகச் சென்றுவிட்ட கடற்கரைச் சோலை அதுவே என்றனை. இப்பாடலில் தலைவன் தலைவிக்கு நெய்தலின் தழையால் தொடுத்த தழையுடையை அணிவித்தான் என்ற செய்தி காணப்படுகின்றது. தழையுடை தழைகளால் மாறுபடத் தொடுப்பதன் மூலம் செய்யப்படுகின்றது என்ற செய்தியும் கிடைக்கின்றது. தழைகளைத் தொடுப்பதன் மூலம் தழையாடை செய்யப்படுகின்றது என்பதை ஐங்குநுறூற்றுப் பாடல் ஒன்றும் குறிப்பிடுகின்றது.

நெய்யோடுமயக்கிய உழுந்து நூற்றன்ன
வயலைஅம் சிலம்பின் தலையது
செயலைஅம் பகைத் தழைவாடும் ( ஐங்.211)

அசோகமரத் தழகைளால் ஒன்றுக் கொன்று மாறுபட தொடுக்கப்பட்டு செய்யப்பட்ட தழையடையைத் தலைவன் தோழியிடம் கொடுத்து தலைவியை ஏற்க வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது. மேற்குறித்த நற்றிணைப் பாடலும் தழைகளை மாறுபடத் தொடுப்பதன் மூலம் செய்யப்படுவதைக் குறிப்பிடுகின்றது. தழைகளை நாரினால் கோர்த்துக் கட்டுவதன் மூலம் உருவாக்கப்படும் தழையாடை ஒருவகை. தழைகளை மாறுபடத்

தொடுப்பதன் மூலம் அதாவது தழைகளைப் பின்னுவதன் மூலம் உருவாக்கப்படுவது மற்றொரு வகை.

மலைச் சாரலில் விளைந்த தழைகளால் தழையுடை செய்யபபட்டதாகக் குறுந்தொகைப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

இலங்கு வளை நெகிழச் சாஅய் யானே
உளனேவாழி-தோழி! -சாரல்
தழைஅணி அல்குல் மகளிருள்ளும்
விழவு மேம்பட்ட என் நலனே (குறு.125)

தோழி மலைச்சாரலில் விளைந்த தழையினால் ஆகிய உடையை அணிந்த அல்குலையுடைய மகளிர் யாவருள்ளும் விழாவைப் போலச் சிறப்புடைய என்னுடைய பெண்மையின் நன்மை தலைவனின் பிரிவால் வளையளல்கள் நெகிழும்படி உடல் மெலிந்து உயிருடன் இருக்கின்றேன் எனத் தலைவி பிரிவாற்றாமையைத் தன் தோழியிடம் உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தழையாடை பெண்ககளிடம் பரவலாகக் காணப்பட்ட ஆடை என்பதை இப்பாடல் புலப்படுத்துகின்றது. தழையுடையில் பூக்களை இணைத்து அழகாக்கினர் என்ற செய்தியைக் குறுந்தொகை159ஆவது பாடல் குறிப்பிடுகின்றது. தழையாடை அழகுபடுத்தப்பெற்றது என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. தழையாடை அழகுணர்சியுடன் பாரக்கப்பெற்றுள்ளது என்பதை அறியமுடிகின்றது. ஆம்பல் மலரின் அக இதழால் தொடுக்கப்பட்ட தழையுடை குறித்துப் பதிற்றுப்பத்து (பதி. 37: 1-3) குறிப்பிடுகின்றது.

ஆம்பல் மலர் இதழ்களால் செய்யப்பெற்ற தழையுடையை அணிந்த பெண்கள் மடிவையர் என அழைக்கப்பெற்றனர். ஆம்பல் மலரின் இதழ்கள் மென்மையானவை. தழையுடை மென்மையானதாக அமைய வேண்டும் என்பதற்காக தழைகளுக்குப் பதிலாக மலர் இதழ்களைப் பயன்படுத்தும் வழக்கம் தோன்றியுள்ளது. இலைகளால் செய்யப்படும் தழையாடை அணிவதற்குக் கடினமானது. எனவே தழையாடை செய்யவதற்கு மென்மையானக் கச்சாப் பொருட்களின் தேடல் நிகழ்ந்துள்ளது. இத்தேடல் ஆம்பல், குவளை ஆகிய மலர இதழ்களை அடையாளப்படுத்தியுள்ளது. தழையாடைகளை மலர்களால் அழகுபடுத்துவதும் மலர் இதழ்களால் தழையாடை செய்வதும் தழையாடையின் வளரச்சிக் கட்டங்களை உணரத்துகின்றன. தழையாடையைப் பொதுவாகப் பெண்கள் அணிந்திருந்தனர் எனக் கருதினாலும் கிடைக்கின்ற சான்றுகளின் மூலம் பொதுமைப்படுத்துவது கடினமானது. இயற்கைப் புணர்சிக்கு வரும் தலைவன் தலைவிக்குத் தழையாடை வழங்கினான் என்ற குறிப்புப் பலவிடங்களில் உள்ளன. விழாக் காலங்களிலும் இளம் பெண்கள் தழையாடை அணிந்திருந்தனர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது. அவ்வாறாயின் தழையாடை என்பது இளம் பெண்களாளேயே பெரிதும் பயன்படுத்தப்பெற்றது எனக் கருதலாமா என்பது ஆய்விற்குரியது. இங்கு மற்றொரு சான்றையும் காண்போம்.

அளியதாமே சிறுவெள ஆம்பல்
இளையமாகத் தழைஆயினவே
இனியேபெருவளக் கொழுநன் மாய்ந்தென பொழுதுமறுத்து
இன்னாவைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல் ஆயினவே ( புறம். 248).

சிறிய வெண்மையான ஆம்பல் முன்பு நாம் இளமையுடன் இருக்கும் காலத்தில் தழையாடையாய் இருந்து உதவின. இப்பொழுது பெரிய செல்வத்தையுடை யகணவன் இறந்த பிறகு உண்ணும் வேளைத் தவறித் துன்பந்தரும் துஞ்சும் பொழுதில் உண்பதற்குத் தம் அல்லியிடத்து உண்டான புல்லரியைத் தந்துதவின எனத் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஆம்பல் இளமைக் காலத்தில் தழையாடையாக இருந்தன. அதே ஆம்பல் இப்போது உணவாயிற்று என்று தலைவி குறிப்பிடுவது கவனத்திற்குரியது. தழையாடை இளமைக்காலத்தில் அணியப்பெறுவது என்ற குறிப்பைத் தலைவி தருகின்றாள். எனவே தழையாடை இளம் பெண்களால் அணியப்படுவதாக இருந்துள்ளது எனக் கருதலாம்.

தழையாடை போன்று நார் உடுக்கை பற்றிய குறிப்புகளும் உள்ளன. நற்றிணை, திருமுருகாற்றுப்படை, புறநானூறு ஆகிய நூற்களில் இக்குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

மரல் நார் உடுக்கை மலைஉறை குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சந்தம்
வறனுற்று ஆர முருக்கி (நற். 64)

தோழி நம் காதலர் எத்தகு சிறப்புடையவராயினும் அவரிடத்துக் தூதுவிடக் கருதுதனை இனி நீ விட்டுவிடுக. அவர் நம்மைக் கைவிட்டார் என்பதற்காகவும் வருந்தாதே. நாம் இவ்வாறு துன்பத்திலே வருந்துமாறு துறந்தவர் நட்புதான் இனி நமக்கு எதற்கு? மரல் நாரினாலே பின்னிய உடையையுடையவராகிய மலையில் வாழும் குறவர் சிறிய இலைகளையுடைய சந்தனமரத்தின் மேற்பட்டையை அறியாமையால் அறுத்தனர். என்பது இப்பகுதியின் பொருளாகும்.

குறவர்கள் மரத்தின் நாரினால் நெய்யப்பட்ட நார் உடையை அணிந்திருந்தனர். இங்கு ஆடை பின்னப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. நார் ஆடை குறித்த வேறு குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. திருமுருகாற்றுப்படையில் (126) முனிவர்கள் மரவுரி உடுத்தியிருந்ததாகப் பதிவாகியுள்ளது. மரவுரிகுறித்தும் வேறுகுறிப்புகள் சங்க இலக்கியங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. மரவுரியேத் தொன்மையான ஆடையாக இருக்கலாம் என்பது மானிடவியலார் கருத்து. மருவுரி கடினமானது, எடைமிகுதி, உடலின் அசைவிற்கு உகந்ததாக இருப்பதில்லை போன்ற காரணங்களால் மென்மையானப் பொருட்களால் ஆன ஆடையின் தேவை உணரப்பட்டதன் விளைவே தழையாடையாக இருக்கலாம். நற்றிணை மற்றும் ஐங்குறுநூறு பாடல் குறிப்புகள் தழையாடை தொடுக்கப்படுவதையும் பின்னப்படுவதையும் குறிப்பிடுகின்றன. தொடுக்கப்படுவது முதல் நிலையாகவும் பின்னப்படுவது இரண்டாம் நிலையாகவும் அமைந்திருக்க வேண்டும் .பின்னப்படுவதில் மற்றுமொரு வளர்ச்சி தழைகளுக்குப் பதிலாக ஆம்பல் மற்றும் குவளை மலர்களின் இதழ்கள் பயன்படுத்தப்பட்டடைமயாகும். தழைகள் அல்லது மலர் இதழ்களைப் பின்னுவதன் மூலம் தயாரிக்கப்படும் தழையாடைகள் மிகவிரைவில் பயனற்றவையாகிவிடும். இதனை ஐங்குநுறூறு 211 ஆவதுபாடல் உறுதிசெய்கின்றது. எனவே உறுதியான சிலகாலம் பயன்படுத்தத்தக்க ஆடையின் தேவை உருவாகியிருக்க வேண்டும். இதன் விளைவே நற்றிணைப் பாடல் குறிப்பிடும் மரநார் உடுக்கையாக இருக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள தழையுடை குறித்த குறிப்புகள் வெவ்வேறு காலக்கட்டங்களில்

தழையுடை வெவ்வேறாக மாறிவந்துள்ளன என்பதைத் தெளிவுப்படுத்துகின்றன. இக் குறிப்புகளை ஒன்றோடுஒன்று தொடர்புப்படுத்திப் பொருள் கொள்ளும் போது தழையுடையின் வளர்ச்சிக் கட்டங்களை அடையாளப்படுத்த முடிகின்றது. அவ்வாறாயின் சங்க இலக்கியங்களில் காணப்படும் தழையுடை குறித்தகுறிப்புகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கால அடுக்குகளை முன்நிறுத்துகின்றன என்பதை உறுதி செய்யலாம்.ள

**துணைநின்ற நூல்கள்**

1. பல்லடம் ரவி 2006: நெசவின் கதை: பல்லடம்: கஸ்தூரி பதிப்பகம்.
2. பாலசுப்பிரமணியன் கு.வெ. 2004: நற்றிணை: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
3. தட்சிணாமூரத்தி அ. 2004: ஐங்குறுநூறு: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
4. ஆலிஸ் ஆ. 2004: பதிற்றுப்பத்து: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
5. நாகராசன்,வி 2004: குறுந்தொகை: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
6. மோகன் இரா. 2004: பத்துப்பாட்டு: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
7. பாலசுப்பிரமணியன் கு.வெ.மற்றும் பலர் 2004: புறுநாநூறு: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.
8. செயபால் இரா. 2004: அகநாநூறு: மூலமும் உரையும், சென்னை: நியுசெஞ்சுரி புக்ஹஸ்.